சென்னை, கிண்டி, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின், தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் சார்பில் புத்தாக்க கண்டுபிடிப்பு கண்காட்சியினை திறந்து வைத்து, பள்ளி மாணவர்களின் புத்தாக்க கண்டுபிடிப்புகளை பாராட்டி மாணவர்களுக்கு காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், , தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் இயக்குநர் இரா. அம்பலவாணன், தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் துணை இயக்குநர் .நா. கமலக்கண்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை மூலம்

மாணவர்களின் 65 புதிய கண்டுபிடிப்புகளுக்கு ரூ. 40.50 லட்சம் பரிசு!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கி பேச்சு!

சென்னை, ஜூலை 17-

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் துறையின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் மூலம் நேற்று (16.7.2025) அண்ணாப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் துறையின் அமைச்சர் தா.மோ. அன்பரசன் மாணவர்களின் 65 புதிய கண்டுபிடிப்புகளுக்கு ரூ.40.50 லட்சம் பரிசுத் தொகை வழங்கி 2 புதிய அறிவிப்புகளை வெளியிட்டு பேசியதாவது :-

“ தமிழ்நாடு அரசின் EDII நிறுவனம் மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு தொழில் முனைவு பயிற்சியுடன் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்தும் விதமாக நிதி உதவிகளை அளித்து வருகிறது. இன்று இந்த விழாவில், புத்தாக்கபற்று சீட்டுதிட்டத்தின்கீழ் 15 புதியண்டுபிடிப்பாளர்களுக்கும், பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 50 மாணவ குழுக்களுக்கும் என மொத்தம் 65 புதிய கண்டுபிடிப்புக்களுக்கு ரூ.40 இலட்சத்து 50 ஆயிரம் உதவி தொகையும், பரிசுத் தொகையும், வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தப் பரிசுகளை பெறும் அரசு பள்ளி மாணவர்கள் உள்ளிட்டபுதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு என் பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று இந்த கண்காட்சியில் நம் மாணவர்களின் புதிய கண்டுப்பிடிப்புக்களான ரோபோ ரோடு ரோலர், பல்நோக்கு விவசாய கருவி, கப்பல் ஊழியர்களுக்கான பாதுகாப்பு பெல்ட், Sound Gun, அன்னாச்சி பழம் அறுவடை கருவி, மக்கும் தன்மை கொண்ட பிளாஸ்டிக் என பல்வேறு கண்டுபிடிப்புகள் இந்த கண்காட்சியில் இடம் பெற்றுள்ளது.

கல்வி, மருத்துவம், தொழில் துறைக்கு முக்கியத்துவம் அளித்து வரும் முதல்வர் அவர்கள் தொழில்துறையில் தமிழ் நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாற்ற பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். அதன் விளைவாக தமிழ்நாடு இன்று இந்திய அளவில் அதிக தொழில் முதலீடுகளை ஈர்த்த மாநிலங்களில் முதல் மாநிலமாக உள்ளது. பொருளாதார வளர்ச்சியில் 9.69 சதவீதம் பெற்று முதலிடத்தில் உள்ளது. புத்தாக்கத் தொழில்கள் தர வரிசையில் முதல் இடத்தில் உள்ளது. புத்தாக்க சிந்தனைக் கொண்ட நம் இளைஞர்கள் - மாணவர்களுக்கு EDII நிறுவனம் மூலம் மாவட்ட தலைநகரங்கள், கல்லூரிகள், பள்ளிகள், வட்டார அளவிலும் தொழில் முனைவு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

கழக அரசு பொறுப்பேற்ற 4 ஆண்டு காலத்தில் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 71 ஆயிரத்து 735 நபர்களுக்கு தொழில்முனைவு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு 19 ஆயிரம் நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

பள்ளி மாணவர்கள் கல்வியில் மட்டும் அல்லாமல் புதிய கண்டுப்பிடிப்புகளை உருவாக்குவதிலும் சிறந்து விளங்கவேண்டும் என்பதற்காக இந்தியாவிலேயே முதல் முறையாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் “பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டத்தினை” அறிவித்தார். கடந்த 3 ஆண்டுகளில் 8 ஆயிரத்து 74 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு, தொழில் முனைவோர் விழிப்புணர்வு பயிற்சிகளும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் 21 லட்சத்து 86 ஆயிரம் பள்ளி மாணவ - மாணவியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. புத்தாக்க தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 6 லட்சத்து 40 ஆயிரத்து 820 கல்லூரி மாணவர்களுக்கும், அரசு கல்லூரிகளில் உள்ள Incubation Centres மூலம் 1 லட்சத்து 45 ஆயிரம் மாணவர்களுக்கும் என இதுவரை 7 லட்சத்து 85 ஆயிரம் இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு தொழில் முனைவோர் விழிப்புணர்வு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன்.

புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்க இளைஞர்களுக்கு கழக அரசு உதவி தொகையினை புத்தாக்க பற்றுச் சீட்டு திட்டத்தின் கீழ் வழங்கி வருகிறது. ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்புக்காக வழங்கப்பட்டுவரும் உதவித் தொகை நடப்பாண்டு முதல் ரூ. 2 லட்சத்திலிருந்து ரூ. 3 லட்சமாகவும், அவற்றை தயாரித்து சந்தைப்படுத்த வழங்கப்படும் உதவித் தொகை ரூ.5 லட்சத்திலிருந்து ரூ. 7 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ், 470 புதிய கண்டுப்பிடிப்பாளர்களுக்கு ரூ. 12 கோடியே 10 லட்சம் உதவி தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையில் StartUp நிறுவனங்களைஉருவாக்க, புத்தொழில் முனைவோர்களுக்கு ஆதார நிதி வழங்கும் (TANSEED) திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் இதுவரை169 நிறுவனங்களில் ரூ.18 கோடியே 79 லட்சம் முதலீடும், 36 SC / ST StartUp நிறுவனங்களில் ரூ.51 கோடியே 20 லட்சம் முதலீடும், ஆக மொத்தம், கடந்த 4 ஆண்டுகளில் 205 StartUp நிறுவனங்களில்,ரூ. 69 கோடியே 99 லட்சம் தமிழக அரசு முதலீடு செய்துள்ளது. இந்த திட்டத்திற்காக நடப்பு நிதி நிலை அறிக்கையில், ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதல்வர் அவர்களின் சீரிய திட்டங்களால் ஆட்சி பொறுப்பேற்ற 4 ஆண்டு காலத்தில் ரூ. 2 ஆயிரத்து 20 கோடியே 96 லட்சம் மானியத்துடன், ரூ.5 ஆயிரத்து 180 கோடியே 18 லட்சம் வங்கிக் கடனுதவி வழங்கப்பட்டு, 59 ஆயிரத்து 584 நபர்கள் புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 2G, 3G, 5G என உலகம் வேகமாக முன்னேறி கொண்டிருக்கும் காலத்தில் நம் மாணவர்களும் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து மக்களின் தேவையினை புரிந்து தரமான பொருட்களை குறைந்த விலையில் உருவாக்கிட வேண்டும் என கேட்டுக் கொண்டு, உங்களுக்கு தேவையான ஆலோசனைகள் பயிற்சிகள் நிதி உதவிகள் வழங்க அரசு தயாராக உள்ளது. உங்கள் புதிய கண்டுபிடிப்புகளால் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு உருதுணையாக இருந்து தமிழகத்தை முன்னேற்ற பாதைக்கு அழைத்து செல்லுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சிக்கு முன் மாணவ மாணவியர்களின் புதிக கண்டுப்பிடிப்புக்களின் கண்காட்சியினை அமைச்சர் தா.மோ. அன்பரசன் திறந்து வைத்து பார்வையிட்டார்.

உதகை நகர கழகம் சார்பில், நகரக் கழக செயலாளர் எஸ்.ஜார்ஜ் ஏற்பட்டின் BLA 2, BDA ஆகியோரை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட திமுக அலுவலகத்தில் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் அரசு கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட கழக பொறுப்பாளர் கே எம் ராஜு ஆகியோர் கலந்துகொண்டு கழக உறுப்பினர் சேர்க்கையை தலைமை கழகம் நிர்ணயத்தை சதவிகிதத்தை அதிகம் சேர்த்துள்ள 20 க்கு மேற்பட்ட பூத் ஏஜெண்டுகள், BDA ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்து சிறப்பு பரிசுகள் வழங்கினார்கள். மேலும் வாக்குச்சாவடிகளில் அதிகமாக உறுப்பினர்களை சேர்க்கும் வாக்குச்சாவடிகளுக்கு சிறப்பு பரிசுகளும் வழங்கப்பட உள்ளது. இந்நிகழ்ச்சியில் ஜே. ரவிக்குமார், காமராஜ், வாணிஸ்வரி, ஜே..எஸ்.ரமேஷ், கார்டன் கிருஷ்ணன், ரீட்டா மேரி, மோகன் குமார், மஞ்சு குமார் மற்றும் கழக நிர்வாகிகள், தோழர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஜூலை 30- அன்று

இளங்கலை மருத்துவம், பல் மருத்துவப் பட்டப்படிப்புகளுக்கு கலந்தாய்வு!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஜூலை 17-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (16.07.2025) சைதாப்பேட்டை, 140வது வார்டு, சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.5.25 கோடி மதிப்பீட்டில் நவீன கலையரங்கம் கட்டுமானப் பணி, ரூ.3.55 கோடி மதிப்பீட்டில் ரெட்டிக்குப்பம் சாலை மற்றும் கோடம்பாக்கம் சாலையில் 455 மீட்டர் மழைநீர் வடிகால் வாய் கட்டுமானப் பணி மற்றும் 142வது வார்டு, திடீர் நகரில் ரூ.61 இலட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் ஓரக்கல்வாய் கட்டும் பணியினை தொடங்கி வைத்து ஆய்வு செய்தார்.

பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இளங்கலை மருத்துவப் பட்டப்படிப்பு கலந்தாய்வு தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இளங்கலை மருத்துவம்/BDS பல் மருத்துவப் பட்டப்படிப்புகளுக்கு கடந்த ஜூன் மாதம் 06 ஆம் தேதியிலிருந்து ஜீன் 29 ஆம் தேதி வரை பெறப்பட்டது. அதில் 72,743 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. இந்த விண்ணப்பங்கள் ஆய்வு செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த விண்ணப்பங்களில் ஒரு சில விண்ணப்பங்கள் சான்றிதழ்களை இணைக்க மறந்து விண்ணப்பத்திருப்பார்கள், அவர்களுக்கான கால அவகாசம் இரண்டு நாட்கள் வழங்கப்பட்டது. இந்த இரண்டு நாட்களில் எந்தெந்த மாணவர் எந்தெந்த சான்றிதழ்களை இணைக்கவில்லையோ அதனை இணைப்பதற்குரிய கால அவகாசமாக 2 நாட்கள் தரப்பட்டது. வழங்கப்பட்டிருக்கும் 2 நாட்களில் சான்றிதழ்களை இணைத்து மீண்டும் தந்தால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு தகுதி பட்டியல் வெளியிடப்படும். தகுதி பட்டியல் சரி பார்க்கப்பட்டிருக்கும்

போது 20 பேருடைய போலிச் சான்றிதழ்கள் இருப்பது கண்டறியப்பட்டது. 20 மாணவர்கள் தங்களுடைய சான்றிதழ்கள் போலியாக விண்ணப்பத்திருக்கிறார்கள். எனவே அந்த 20 மாணவர்களுக்கும் கலந்தாய்வில் கலந்து கொள்வதற்குரிய தகுதி நீக்கம் செய்யப்படவிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல் 3 வருடங்களுக்கு கலந்தாய்வில் கலந்து கொள்வதற்கு தடை செய்யப்பட்டிருக்கிறது. அது மட்டு மல்லாமல் இவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் தொடர இருக்கிறது. 20 மாணவர்களில் 7 மாணவர்கள் பிறப்பிட சான்றிதழ்களை போலியாக தந்திருக்கிறார்கள். 9 மாணவர்கள் பிறப்பிட சான்றிதழ்கள் மற்றும் சாதிச்சான்றிதழ்களை போலியாக தந்திருக்கிறார்கள். 4 மாணவர்கள் NRI தகுதிக்கான தூதரக சான்றிதழ்களை போலியாக தந்திருக்கிறார்கள். ஆக போலியான சான்றிதழ்களை வழங்கிய 20 மாணவர்களுக்கு சட்ட ரீதியான நடவடிக்கையும், 3 ஆண்டுகள் கலந்தாய்வில் கலந்து கொள்வதற்கும் தடை விதித்தும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. ஆக இந்த சான்றிதழ்களை சரிபார்ப்பதற்குரிய இறுதி நாளாக 18.07.2025 காலை 10 மணி வரை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

IRT மற்றும் முன்னாள் இராணுவத்தினர் பரிசீலினை தற்போது நடந்து வருகிறது. அவர்களுக்கும் 2 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட உள்ளது.

இந்த சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலினை முடிந்து, இறுதி பட்டியல் வருகின்ற 25.07.2025 காலை 10 மணிக்கு வெளியிடப்பட உள்ளது. இந்த பட்டியல் வெளியிடப்பட்டவுடன் ஒன்றிய அரசின் கால அட்டவணைப்படி 30.07.2025 அன்று முதல் கலந்தாய்வு நடத்தப்படவிருக்கிறது என்று அமைச்சர் மா.சுப்பிரமணி யன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

காஞ்சிபுரம் தொகுதி

கோனேரிகுப்பம் கிராமத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. - மலர்கொடி குமார் பங்கேற்பு

சென்னை, ஜூலை 17 -

தி.மு.கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பொதுமக்களின் வீடுகளுக்கு அரசு அலுவலர்கள் சென்று அவர்களின் குறைகளுக்கு தீர்வு காணுகிற உன்னத திட்டமான “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை நேற்று (16.07.2025) காஞ்சிபுரம் ஒன்றியம், கோனேரிக்குப்பம் ஊராட்சி, இந்திரா நகர் பகுதியில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் துவக்கி வைத்து, பொதுமக்களிடம் மனுக்களை பெறும் அரங்குகளை பார்வையிட்டார். அதுபோது ஒன்றியக்குழு பெருந்தலைவர் திருமதி மலர்கொடி குமார், ஒன்றியச் செயலாளர் பி.எம். குமார், மாவட்ட வருவாய் அலுவலர் வெங்கடேசன், வட்டார வளர்ச்சி அலுவலர் பத்மாவதி, துணை செயலாளர் எஸ்.வி. ரமேஷ், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி. ராதாகிருஷ்ணன், மாவட்ட அயலக அணித் தலைவர் பி.எம்.நீலகண்டன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் எஸ். தமிழ்செல்வன், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் நவீன், கோ னேரிக்குப்பம் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி சைலஜா சேகர், ஒன்றியக் குழு உறுப்பினர் திருமதி ஆதிலட்சுமி ரவி, கிளைக் கழக செயலாளர்கள் ரவி, ராஜன்பாபு, வில்வநாதன், வீரராகவன், மாதவன், ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் கார்த்தி, லோகேஷ், பூவரசன், புருசோதம்மன், அனைத்து துறை அரசு அலுவலர்கள், ஏராளமான பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.

தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

சென்னை மேற்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு!

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சுற்றுச்சூழல் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனத்தில் திருத்தம் செய்யப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ளவர்கள் சென்னை மேற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களாக பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

தலைவர் - மெய். சண்முகம் 8, புத்திபேகம் தெரு, கோபாலபுரம், சென்னை - 600 086.

துணைத் தலைவர் - நே.திருமாறன், 118, முத்தையா தெரு, தேனாம்பேட்டை, சென்னை-600086.

அமைப்பாளர்- **பா.சுந்தரராமன்,** டைமண்ட கேட், 37, அபிபுல்லா சாலை, தியாகராயர் நகர், சென்னை - 600 017.

துணை அமைப்பாளர்கள் - செ.நா. எல்லப்பன், 31/15, இராஜாஜி 3வது தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-600034. எஸ். மணிவண்ணன், 2, எம்.எம்.காலனி, அமைந்தகரை, சென்னை-600029. கோ.க. தினகரன், 62/117, திருவள்ளுவர் தெரு, க்யூ பிளாக், எம்.எம்.டி.ஏ.காலனி, அரும்பாக்கம், சென்னை-600106. ரா. பாஸ்கர், 24/12, சைவ முத்தையா தெரு, இராயப்பேட்டை, சென்னை-600014. ஆர்.எஸ். நாராயணபாபு, 17/37, சீனிவாச பெருமாள் சன்னதி 2வது தெரு இராயப்பேட்டை, சென்னை-600014. வ. செல்வம், ஏ/19, திரு.வி.க.குடியிருப்பு, தேனாம்பேட்டை, சென்னை-600018. எஸ். சுரேஷ்பாபு, 25/9, குலான் அப்பாஸ் அலிகான் 7வது தெரு ஆயிரம்விளக்கு, சென்னை.

“அண்ணா அறிவாலயம்”
நாள் : 16-07-2025.
சென்னை - 18.

கார்த்திகேய சிவசேனாபதி,
செயலாளர்,
தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

கழக சட்டத்துறை துணைச் செயலாளர் என்.மருதுகணேஷ் சிறிய தந்தை

கழக மூத்த முன்னோடி சி.சுபாஸ்சந்திரபோஸ் (எ) முரசொலி போஸ் மறைவு !

மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. – கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஜூலை-17

திமுக சட்டத்துறை துணைச் செயலாளர் வழக்கறிஞர் என்.மருதுகணேஷின் சிறியதந்தையும், கழக தோழர்கள் எஸ்.கணேசன், எஸ்.ராஜா ஆகியோரின் தந்தையும், மதுரை பசுமலை கிளைக்கழகத்தின் முன்னாள் அவைத் தலைவரும், கழகத்தின் மூத்த முன்னோடியுமான சி.சுபாஷ்சந்திர போஸ் (எ) முரசொலி போஸ் (வயது 82) அவர்கள் உடல்நலக்குறைவு காரணமாக (13.07.2025 அன்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து மதுரை மாநகர் மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான

கோ.தளபதி சுபாஷ் சந்திர போஸ் உடலுக்கு மலரஞ்சலி செலுத்தி இறுதி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வின் போது திருப்பரங்குன்றம் வடக்கு பகுதி செயலாளர் கே. கிருஷ்ண பாண்டியன், ஆனையூர் பகுதி துணைச் செயலாளர் எம்.சின்னான், மதுரை மாநகராட்சி கல்வி குழு தலைவர் எம்.பி.ஆர். ரவிச்சந்திரன், 93வது வட்ட செயலாளர் எம்.ஜெயராமன், வெஸ்லி பாண்டியன், மற்றும், 93வது வட்ட நிர்வாகிகள் கழகத் தோழர்கள் பலரும் பங்கேற்று மலரஞ்சலி செலுத்தி இறுதி மரியாதை செலுத்தினார்கள். அன்னாரின் இறுதி சடங்கு (14.07.2025 திங்கட்கிழமை) பசுமலை மயானத்தில் நடைபெற்றது.இதில் கழகத்தோழர்கள் பொதுமக்கள் பலரும் பங்கேற்று இறுதி அஞ்சலி செலுத்தினர்.

சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

இன்று 6 வார்டுகளில் நடைபெறுகிறது!

சென்னை,ஜூலை.17-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நாளை (17.07.2025) மாதவரம் மண்டலம், வார்டு-32, சூரப்பேட்டை சந்திப்பு, அம்பத்தூர் ரெட்ஹில்ஸ் சாலையில் உள்ள ஸ்ரீவரத மஹால், இராயபுரம் மண்டலம், வார்டு-49ல் பழைய வண்ணாரப்பேட்டை, ஜி.ஏ. சாலையில் உள்ள மைனா பார்ட்டி ஹால், அம்பத்தூர் மண்டலம், வார்டு-80ல் புதூர், கிழக்கு பானுநகர், ரெட்ஹில்ஸ் சாலை, மல்லிகா மஹால், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-130ல் வடபழனி, 100 அடி சாலையில் உள்ள ஆர்த்தி மஹால், பெருங்குடி மண்டலம், வார்டு-184, பஞ்சாயத்து அலுவலகச் சாலையில் உள்ள 184வது வார்டு அலுவலகம், சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு-192ல் நீலாங்கரை, சுகன்யா திருமண மண்டபம் ஆகிய 6 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொது மக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி 169வது வார்டு மேம்பாட்டு நிதியிலிருந்து, ரூபாய் 16 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட காந்தி மண்டபம் பேருந்து நிறுத்தத்தினை துணை மேயர் மு.மகேஷ்குமார் பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், அடையாறு மண்டல அலுவலர் . ஹார்டின் ரொஸாரியோ, வட்டச் செயலாளர் எல். ஆரோக்கியராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, சாணாபுத்தூர் ஊராட்சி, கொண்டமாநெல்லூர் நியாய விலை கடையை முன்னாள் மாவட்ட செயலாளர், தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. ஆய்வு மேற்கொண்டார். உடன் மு.மணிபாலன், பொதுக்குழு உறுப்பினர் கே.சுப்பிரமணி, பார்த்தசாரதி, கதிரவன், நாகராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.